வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 20.03.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 73 பக்கங்கள் : 08

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433 076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் மாயம்!

### விரைந்து விசாரணை செய்யுமாறு ஆசிரியர் சங்கம் கோரிக்கை!

யாழ்ப்பாணம், மார்ச் 20

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் நேற்று முன்தினம் பின்னிரவு முதல் மர்மமான முறையில் காணாமல் போயிருக்கிறார். அவருடன் உடனடியாகத் தொடர்புகொள்ள முடியாதிருப்பதுடன், அவரது வீட்டிலோ, வெறெங்குமோ அவரைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் அவரைப் பாதுகாப்பாகக் கண்டுபிடிப்பதற்கு உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது-

யாழ்ப்பாணம் - அரியாலை, புங்கன்குளம் பகுதியில் தனது மகளுடன் வசித்து வந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளருடன் நேற்று அதிகாலை முதல் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் அவரைத் தேடி அவரது வீட்டுக்குச் சென்ற உறவினர்கள் அவர் வீட்டில் இல்லாததை அவதானித்துள்ளனர். வீட்டிலும், அருகிலும் இருந்த கண்காணிப்புக் கமெராக்கள் நொருக்கப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்துள்ளது.

நிலைமையின் பாரதூரம் கருதி உறவினர்களால் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்பாணம் பொலீசாருடன்

07

## போரை நிறுத்துங்கள்!

### ஐ.நா. பொதுச்செயலர் வேண்டுகோள்



நியூயோர்க், மார்ச் 20

மத்திய கிழக்கில் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே நிலவும் போர் முற்றிலும் கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் அபாயம் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் எச்சரித்துள்ளார்.

ஈரான் மீதான தங்களின் தாக்குதல்களை உடனடியாக

07

## எந்த நிதி நெருக்கடியும் இலங்கையில் இல்லை!

### கூறுகிறார் அமைச்சர் அனில் ஜயந்த

கொழும்பு, மார்ச் 20

நாட்டில் தற்போது சிலர் சித்தரிக்க முயல்வது போன்ற எவ்வித நிதி நெருக்கடியும் இல்லை என தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

07

## கறுப்புக்கொடி விவகாரத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட மூன்று பேரும் வாக்குமூலங்கள் பெறப்பட்ட பின் விடுதலை!

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் 4ஆம் திகதி ஏற்றப்பட்டிருந்த தேசியக் கொடியை இறக்கி, கறுப்புக் கொடி ஏற்றிய விவகாரத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கலைப்பீட மாணவர் ஒன்றியம் ஆகியவற்றைச் சேர்ந்த 3 மாணவர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி, யாழ். பல்கலைக்கழகத்தில் சிங்கக் கொடியை

07

## விசாரணைக்கு அழைக்கப்பட்டதை கண்டித்து பல்கலை முன்றலில் மாணவர்கள் கவன ஈர்ப்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கையின் சுதந்திர தினத்தன்று யாழ். பல்கலைக்கழகத்தில் தேசியக் கொடியை இறக்கி, கறுப்புக்கொடி ஏற்றிய சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள்

07

## அமெரிக்க விசேட பிரதிநிதியுடன் ஜனாதிபதி அநுரகுமார சந்திப்பு!



கொழும்பு, மார்ச் 20

இலங்கை வந்துள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்க விசேட பிரதிநிதியும், இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதுவருமான

07

## சிறீலங்கன் எயார்லைன்ஸ் ஊழல் விவகாரம் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கும் தொடர்பு

கொழும்பு, மார்ச் 20

2016ஆம் ஆண்டு இடம்பெற்ற சர்ச்சைக்குரிய எயார்பஸ் விமானக் கொள்வனவு கொடுக்கல் வாங்கலின்போது, கையூட்டாகப் பெறப்பட்ட 60 மில்லியன் ரூபா பணம் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டதாக சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேன தெரிவித்துள்ளார்.

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கொழும்பு நீதவான் நீதிமன்றில் நேற்று இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

கபில சந்திரசேன வழங்கிய வாக்குமூலத்தின் படி, தமக்குக் கிடைத்த 60 மில்லியன்

07

## சிங்கப்பூரில் ரணிலுக்கு அறுவை சிகிச்சை!

கொழும்பு, மார்ச் 20

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளார் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்புத் துறைமுக நகரப்

07

## வடக்கில் வாழும் சிங்களவர்களுக்கு உரிமை வழங்க கோரி நடைபயணம்

### யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று ஆரம்பம்



யாழ்ப்பாணம், மார்ச் 20

வடக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள மக்களின் உரிமைகள் மற்றும் அவர்கள் எதிர்கொண்டுள்ளதாக கூறப்படும் இழப்புகள் தொடர்பாக அரசாங்க அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில்

07

## மத்திய கிழக்குப் போர் நாங்கள் நடுநிலைதான்!

### அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

மத்தியக் கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்தத்தில் எந்த தரப்பினருக்கும் நாங்கள் ஆதரவளிக்கப் போவதில்லை. நடுநிலையான கொள்கையுடன் எப்போதும் உலக சமாதானத்திற்காக நாங்கள் தலையீடுகளை மேற்கொள்வோம். அதன் பிரகாரம் எமது வெளி [illegible]

07

## ஏப்ரல் மாதம் முழுவதும் போதியளவு எரிபொருள்

### 5 கப்பல்களுக்கான முன்பதிவுகள் உறுதி

கொழும்பு, மார்ச் 20

ஏப்ரல் மாதம் முழுமைக்கும் தேவையான எரிபொருள் இறக்குமதிக்கான அனைத்து முன்பதிவுகளும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இது குறித்து கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே கருத்து வெளியிடுகையில் -

நேற்று ஐந்து எரிபொருள் கப்பல்களுக்கான

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# வடக்கில் பாடசாலைகளுக்குள் மத நூல்கள் விநியோகிக்க தடை

## "பைபிள்" விவகாரத்தையடுத்து ஆளுநர் நடவடிக்கை

*யாழ்ப்பாணம், மார்ச் 20*

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு பைபிள் விநியோகிக்கப்படவுள்ளமை தொடர்பில் அண்மைய நாள்களாக எழுந்துள்ள சர்ச்சைகள் மற்றும் கரிசனைகளைக் கருத்திற்கொண்டு, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இவ்விடயத்தில் விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயசந்திரனுக்கு ஆளுநர் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

வெளிநாட்டுத் தொண்டு நிறுவனமொன்றால் பாடசாலை மாணவர்களுக்கு பைபிள் வழங்குவது தொடர்பில் மாகாணக் கல்வித் திணைக்களத்தால் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதம் தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த அமைப்பு தமக்குரிய கிறிஸ்தவ மாணவர்களுக்கு மாத்திரம் வழங்குவதற்கே அனுமதி கோரியிருந்த போதிலும், கல்வித் திணைக்களத்தின் ஆரம்பக் கடிதத்தின் வாசகங்கள் அனைத்து மாணவர்களுக்கும் விநியோகிக்கப்படவுள்ளதாகப் புரிந்துகொள்ளப்பட்டு சர்ச்சைகள் எழுந்தன.

இதனையடுத்து, குறித்த விநியோகமானது றோமன் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ மாணவர்களுக்கு மாத்திரமே என மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளரால் திருத்தப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் பின்னர் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இவ்விடயம் தொடர்பிலான சர்ச்சைகள் தொடரும் நிலையில், பாடசாலைக் கட்டமைப்புக்குள் மத நல்லிணக்கத்தைப் பேணுவதும், தேவையற்ற குழப்பங்களைத் தவிர்ப்பதும் மிகவும் அவசியமானது என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், இதற்கான உரிய ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைவாக, பாடசாலைகளுக்குள் வெளிநபர்களோ அல்லது அமைப்புகளோ நேரடியாகச் சென்று மத நூல்களை விநியோகிக்கும் நடைமுறை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்று ஆளுநர் பணித்துள்ளார். மேற்படி பைபிள்களை விநியோகிக்க விரும்பும் குறித்த நிறுவனம், அவற்றை வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்க வேண்டும்.

அவ்வாறு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும் நூல்களை, கிறிஸ்தவ பாடத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், அந்த நூல் அவசியமான மற்றும் அப் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு மாத்திரம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆளுநர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். (அ)

# இணையத்தில் பரவும் போலி கியூ.ஆர். குறியீடு

## பொதுமக்களே அவதானம்

*கொழும்பு, மார்ச் 20*

இணையத்தில் பரவி வரும் போலி எரிபொருள் கியூ.ஆர். குறியீடுகள் தொடர்பாக பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் கொள்வனவுக்கான உத்தியோகபூர்வ கியூ.ஆர். குறியீட்டு முறையை அணுகுவதற்கான இணைப்புகள் என உரிமை கோரி, சமூக ஊடகங்கள் மற்றும் குறுஞ்செய்தி செயலிகள் ஊடாக இவ்வாறான போலி இணையத்தள இணைப்புகள் பகிரப்பட்டு வருவதாக அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஏமாற்று இணைப்புகள் பயனர்களை தவறாக வழிநடத்தி, அவர்களின் தனிப்பட்ட தகவல்கள் அல்லது நிதி தொடர்பான விவரங்களைத் திருடும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# மின் கட்டண திருத்தம் குறித்து மார்ச் 31 இற்குள் இறுதி முடிவு!

*கொழும்பு, மார்ச் 20*

2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்கான மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதி முடிவு, எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கப்படும் என இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள கட்டணத் திருத்த முன்மொழிவுகள் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைப் பெறும் இறுதி அமர்வு நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்றது.

இதன்போது கடந்த பெப்ரவரி 25 ஆம் திகதி ஆரம்பமான இந்தத் தொடர் கலந்தாய்வின் முடிவிலேயே, மார்ச் 31 இற்குள் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும் என ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

# பெண்கள் தேசிய ஆணைக்குழு செயல்படுவதில் தொடர் சிக்கல்!

*கொழும்பு, மார்ச் 20*

ஜனாதிபதி செயலகம் உறுதியளித்தும் பெண் அமைப்பிற்கான அலுவலக வசதிகள் இன்னும் வழங்கப்படவில்லையென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழு எதிர்கொள்ளும் நிர்வாகச் சிக்கல்களைத் தீர்ப்பதாக ஜனாதிபதி செயலகம் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் உறுதியளித்தபோதிலும், அந்த ஆணைக்குழுவிற்கு இதுவரை அலுவலக வசதிகள் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

கடந்த சில மாதங்களாக ஆணைக்குழுவினால் அலுவலக இடவசதி கோரி பலமுறை கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும், அதற்கு இதுவரை முறையான பதில் கிடைக்கவில்லை என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து கருத்துத் தெரிவித்த அதிகாரி ஒருவர், ஜனாதிபதி செயலகம் மிக விரைவில் அலுவலகத்தை வழங்குவதாகக் கூறியபோதிலும், ஆணைக்குழு உறுப்பினர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குப் பின்னரும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கவலை வெளியிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பாக பாராளுமன்றம், பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம், அரசியலமைப்பு சபை, ஜனாதிபதி செய லகம் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட பல தரப்பினருக்கு ஆணைக் குழு உறுப்பினர்கள் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர். (அ)

# கியூ.ஆர். முறை, எரிபொருள் விலை உயர்வால் இலங்கையின் மீன்பிடித்துறை பாரிய வீழ்ச்சி!

*கொழும்பு, மார்ச் 20*

இலங்கையில் தற்போது அமுலிலுள்ள கியூ.ஆர். குறியீட்டு முறையிலான எரிபொருள் விநியோகம் மற்றும் விலை உயர்வு காரணமாக மீன்பிடித்துறை பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளதாகத் தொழில்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் தட்டுப்பாட்டால் அன்றாட மீனவர்கள் கடலுக்குச் செல்லமுடியாமல் தவிக்கும் அதேவேளை, பலநாள் மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் ஒரு படகுக்கு சுமார் 4 மில்லியன் ரூபாய் வரை நட்டத்தைச் சந்தித்து வருகின்றனர்.

இது குறித்து அகில இலங்கை பலநாள் மீன்பிடி படகு உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் டைரோன் மெண்டிஸ் கருத்து தெரிவிக்கையில்-

பலநாள் படகுகளுக்குத் தேவையான எரிபொருள் ஒதுக்கீடு கிடைத்தாலும், அதன் விலை மிக அதிகமாக உள்ளதாகக் கவலை வெளியிட்டார்.

சர்வதேச சந்தையில் மீன் ஏற்றுமதி விலை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், அதிக விலை கொடுத்து எரிபொருளைக் கொள்வனவு செய்வதால் படகு உரிமையாளர்களுக்கு 3 முதல் 4 மில்லியன் ரூபாய் வரை நட்டம் ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, ஒரு கிலோ 2,000 ரூபாய்க்கு விற்பனையான சூரை மீன், தற்போது ஏற்றுமதி சந்தை முடங்கியுள்ளதால் உள்நாட்டில் 800 ரூபாய் வரை விலை குறைந்துள்ளதாகவும், இதனால் இத்தொழிலை தொடர முடியாதுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக கலந்துரையாட மீன்பிடி அமைச்சிடம் கோரிக்கை விடுத்தும் இது வரை அதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# சட்டவிரோதமாக கடத்தப்பட்ட பாலை மரத் தீராந்திகள் மீட்பு!

*கிளிநொச்சி, மார்ச் 20*

கிளிநொச்சி - தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில், சட்ட விரோதமாக பார ஊர்தியொன்றில் கடத்திச் செல்லப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான பாலைமரத் தீராந்திகள், தரும்புரம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு ரெட்பானா பகுதியில் இருந்து பார ஊர்தி ஒன்றில் சுமார் 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான பாலை மரத் தீராந்திகளை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்ல முற்பட்டவேளை, தருமபுரம் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் அவை கைப்பற்றப்பட்டதுடன், வாகனச் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

இது குறித்து தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# எரிபொருள் கியூ.ஆர். குறியீட்டு சிக்கல்களை தீர்க்க புதிய தீர்வு!

*கொழும்பு, மார்ச் 20*

வாகன உரிமையாளர்கள் எரிபொருள் கியூ.ஆர். குறியீடுகளைப் பெறுவதில் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிக்கும் வகையில் டிஜிற்றல் பொருளாதார அமைச்சு புதிய "Override" அம்சத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

பயனர்கள் துல்லியமான வாகனம் மற்றும் சேசிஸ் விவரங்களை வழங்கினால், இந்த விருப்பத்தின் மூலம் அவர்கள் முந்தைய பதிவுகளை இரத்துசெய்து, புதிய மொபைல் எண்ணைப் பயன்படுத்தி மீண்டும் பதிவு செய்துகொள்ளலாம்.

### முக்கியத் தேவைகள்

அடையாளத்தை உறுதிப்படுத்த, வாகனம் மற்றும் சேசிஸ் எண்கள் சரியாக உள்ளிடப்பட வேண்டும்.

2026 மார்ச் 14 ஆம் திகதிக்கு முன்னர் எரிபொருள் கியூ.ஆர். குறியீடுகளுக்காகப் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

மற்றொரு மொபைல் எண்ணின் கீழ் உள்ள தற்போதைய பதிவை இரத்து செய்து, உண்மையான உரிமையாளரின் எண்ணின் கீழ் புதிய பதிவை மேற்கொள்ளலாம்.

மூளநசசனைந விருப்பத்தைத் தேர்ந்தெடுப்பது, பழைய கணக்கை உடனடியாக நீக்கிவிட்டு, புதுப்பிக்கப்பட்ட விவரங்களுடன் ஒரு புதிய கணக்கைச் செயல்படுத்தும்.

மேலதிக அனுமதி செயல்முறை முடிந்தவுடன், முந்தைய பயனர் அந்த வாகனத்தின் கியூ.ஆர். குறியீடு தொடர்பான அணுகல் மற்றும் சிறப்புரிமைகளை இழப்பார் என்று அதிகாரிகள் விளக்கினர்.

இந்தப் புதிய அம்சத்தின் மூலம், முந்தைய பதிவுகள் செயலிழந்த அல்லது மூன்றாம் தரப்பு மொபைல் எண்களுடன் இணைக்கப்பட்டி ருந்தாலும் கூட, உரிய உரிமையாளர்கள் தங்கள் கியூ.ஆர். குறியீடுகளைத் [illegible] (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.03.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## முன்னென்றுமில்லாத பொருளாதார நெருக்கடியை நோக்கி உலகம்

மத்திய கிழக்கில் போர் தணிவதற்கான எந்தவொரு அறிகுறியையும் காணவில்லை. ஈரானுக்கு எதிரான போரைத் தொடங்கிய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன் யாகுவும் எதிர்பார்த்திராத வகையில் ஈரான் பெருமளவு உயிரிழப்புக்கள், அழிவுகளுக்கு மத்தியிலும், பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகள் பரவலாக ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திய வண்ணம் இருக்கிறது.

ஹோர்முஸ் நீரிணையை மூடியதன் மூலம் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கும் பாரிய பொருளாதார நெருக்கடி போரை நிறுத்துவதற்கு ட்ரம்பையும் நெத்தன்யாகுவையும் நிர்ப்பந்திக்கும் என்ற எதிர்பார்ப்பு ஈரானுக்கு இருந்திருக்கலாம்.

ஆனால், சர்வதேச சட்டங்களை மதிக்காமல் செயற்படும் அவர்கள் உலக அபிப்பிராயத்தை மதித்துப் போரை விரைவில் நிறுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

அதியுயர் ஆன்மீகத் தலைவர் உட்பட பல இராணுவத் தலைவர்களை இழந்த பின்னரும் கூட ஈரானிய அரசு வீழ்ச்சியுறாமல் இருப்பது மாத்திரமல்ல, வலிமையான பதிலடித் தாக்குதல்களை அதன் படைகள் நடத்துவதற்கு வழிகாட்டிக் கொண்டுமிருக்கிறது. ஈரானில் ஆட்சி மாற்றத்தைச் செய்யும் நோக்குடன் போரைத் தொடக்கிய ட்ரம்பும் நெதான் யாகுவும் தற்போது ஆட்சியை நிலைகுலையச் செய்யும் நோக்குடன் தாக்குதல்களை தீவிரப்படுத்தியிருப்பதாகத் தோன்றுகிறது.

அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்படும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்கப் படைத்தளங்களை மாத்திரம் ஈரான் தாக்கவில்லை. அந்த நாடுகளின் பொருளாதார உட்கட்டமைப்புக்கள் மீது குறிப்பாக எண்ணெய் வளங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதற்கு பதிலடியாக அமெராக்காவும் இஸ்ரேலும் ஈரானின் எண்ணெய் மற்றும் எரிவாயு வசதிகள் மீது மோசமான தாக்குதல்களை நடத்துகின்றன.

ஒட்டுமொத்தத்தில் மத்திய கிழக்கின் எண்ணெய் வளம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. போர் முடிவுக்கு வந்தாலும் கூட, மத்திய கிழக்கின் எண்ணெய் வசதிகளின் அழிவின் தாக்கம் பல வருடங்களுக்கு உலக நாடுகளைப் பாதிக்கப் போகும் பேராபத்து இருக்கிறது.

எண்ணெய் விலைகள் வரும் நாட்களில் பல மடங்கினால் அதிகரிக்கப் போகிறது.

தற்போதைய எரிபொருள் விலைகள் அதிகரிப்பின் விளைவான தாக்கங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் திணறும் நாடுகள் வரும் நாட்களில் தீவிரமடையப் போகும் நெருக்கடியை எவ்வாறு கையாளப் போகின்றன என்று நினைத்துப் பார்ப்பதே கஷ்டமாக இருக்கிறது.

பொருளாதார வங்குரோத்து நிலையில் இருந்து மிகுந்த சிரமங்களுடன் படிப்படியாக மீண்டுவரும் இலங்கை படுமோசமான நிலைமையை எதிர்நோக்கப் போகிறது என்பதற்கான சகல ஆபத்து அறிகுறிகளும் தெரிகின்றன. பாரதூரமான பொருளாதார நெருக்கடிக்கள் உலகம் சிக்கிக் கொள்ளப் போகிறது.

இதற்கு ட்ரம்பையும் நெதான்யாகுவையும் விரைவாகப் பொறுப்புக்கூற வைக்கக்கூடியதாக இன்றைய உலக ஒழுங்கு இல்லை என்பது பெரும் கவலை தருகிறது.

# தேவைப்பட்டால் ஈரானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும்

### சவுதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



ரியாத், மார்ச். 20

சவுதி அரேபியாவின் தலைநகரில் உள்ள இரண்டு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது நடத்தப் பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து, தேவைப்பட்டால் ஈரானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு தமக்கு உரிமை உண்டு என்று சவுதி வெளிவிவகார அமைச்சர் பைசல் பின் பர்ஹான் அல் சவுத் தெரிவித்தார்.

ரியாத்தில் நடைபெற்ற வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்புக்குப் பின்னர் ஊடகங்களிடம் பேசிய அவர், ஈரான் தனது தவறான கணிப்புகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும், இவ்வாறான தாக்குதல்கள் மூலம் தெஹ்ரான் எந்தவித நன்மையையும் அடையப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஈரான் தனது அண்டை நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை விட, அவர்கள் மீது அழுத்தம் கொடுக்கவே முயற்சிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், இந்த அணுகுமுறை ஒருபோதும் வெற்றியளிக்காது என்பதுடன், இது அரசியல் ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் ஈரானுக்கே பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார். (எ)



# ஈரானின் எரிவாயு வயல் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல்

### ட்ரம்ப் கடும் விமர்சனம்

வாஷிங்டன், மார்ச். 20

ஈரானின் தெற்கு பார்ஸ் இயற்கை எரிவாயு வயல் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலை விமர்சித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். பாரசீக வளைகுடா பிராந்தியத்தில் உள்ள எரிசக்தி நிலையங்கள் மீது ஈரான் நடத்திய தொடர் தாக்குதல்களுக்கு இஸ்ரேலின் இந்த நடவடிக்கையே முக்கிய காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமூக ஊடக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் ட்ரம்ப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"மத்திய கிழக்கில் நடப்பவற்றால் கோபமடைந்துள்ள இஸ்ரேல், ஈரானின் "தெற்கு பார்ஸ்" எனும் பிரமாண்ட எரிவாயு வயல் மீது வன்முறையான தாக்குதலை நடத்தியுள்ளது. அந்த முழு அமைப்பில் ஒப்பீட்டளவில் ஒரு சிறிய பகுதிக்கு மாத்திரமே இதனால் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து அமெரிக்காவுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. அத்துடன் கட்டார் தேசம் எந்த வகையிலும் இதில் தொடர்புபடவில்லை என்பதுடன், இவ்வாறான ஒன்று நடக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. துரதிர்ஷ்டவசமாக, ஈரான் இந்த உண்மைகளை அறியாமல் அநியாயமாக கட்டாரின் எல்.என்.ஜி. மையம் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. மிகவும் முக்கியமான மற்றும் மதிப்புமிக்க "தெற்கு பார்ஸ்" வயல் மீது இஸ்ரேல் இனி மேல் தாக்குதல்களை நடத்தாது." - என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். (எ)

# ஈரானுக்கு எதிராக போர்: 200 பில்லியன் டொலர் நிதியை கோருகிறது பென்டகன்

வாஷிங்டன், மார்ச். 20


ஈரான் உடனான போர்ச் சூழலை எதிர்கொள்வதற்காக 200 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான நிதியை அங்கீகரிக்குமாறு அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பென்டகன் வெள்ளை மாளிகையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தத் தொகையானது ட்ரம்ப் நிர்வாகம் இதுவரை முன்னெடுத்த இராணுவ நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட தொகையை விட அதிகமானது.

தற்போது போருக்காகப் பயன்படுத்தப்படும் தீர்மான மிக்க ஆயுதங்களின் உற்பத்தியை உடனடியாக அதிகரிப்பதே இந்த நிதி கோரிக்கையின் முக்கிய நோக்கம்.

கடந்த இரண்டு வார காலப்பகுதியில் பென்டகன் பல்வேறு நிதி ஒதுக்கீட்டு கோரிக்கைகளை முன்வைத்துள்ள நிலையில், இந்த புதிய கோரிக்கையானது அமெரிக்க காங்கிரஸில் கடும் அரசியல் நெருக்கடியை உருவாக்கும் என வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் - 20 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 06
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துவிதியை




**மேடம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். சக ஊழியர்க ளால் சங்கடங்கள் வரும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**இடபம்**
எந்த பிரச்சினையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். சிறப்பான நாள்.

**மிதுனம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். காணாமல் போன ஆவணங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் வரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திருப்பம் நிறைந்த நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக இருக்கும். வியாபாரத்தில் புது முயற்சிகள் வேண்டாம். மறைமுக விமர்சனங்கள் உண்டு. திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**கன்னி**
கடினமான காரியம் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்துபோகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உயரும் நாள்.

**மகரம்**
குடும்பத்திலும் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உறவினர்கள் பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
இதுவரை இருந்த சோர்வுகளைப்பு யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்து போகும். மறதியால் பிரச்சினை வந்து நீங்கும்.

# இலங்கையில் வருடம்தோறும் 9,500 வரை காசநோயாளிகள்

## நோய் தடுப்புக்கான தேசிய திட்டம் தகவல்

கொழும்பு, மார்ச். 20

இலங்கையில் வருடாந்தம் 8, 500 முதல் 9, 500 வரையான காசநோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர் என்று காச நோய் மற்றும் மார்பு நோய் தடுப்புக்கான தேசிய திட்டம் தெரிவித்துள்ளது.

இவர்களில் சுமார் 45 சதவீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று சமூக சுகாதார விசேட நிபுணர் மிசாயா காதர் தெரிவித்தார்.

வரும் 24 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக காச நோய் தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

“உலக சனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினர் காச நோய்த்தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இலங்கையில் கடந்த 25 ஆண்டுகளாக வருடாந்தம் பதிவாகும் நோயாளிகளின் எண்ணிக்கையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. கடந்த ஆண்டில் 8,726 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் 93 சதவீதம் பேர் முதன்முறையாக நோய் பாதிப்புக்குள்ளானவர்கள். இவர்களில் 75 சதவீதம் பேருக்கு நுரையீரலில் காசநோய் ஏற்பட்டுள்ளது. சுமார் 5,500 பேர் மற்றவர்களுக்கு நோயைப் பரப்பக்கூடிய நிலையில் உள்ளனர். புவியியல் ரீதியாக மோதரை, மட்டக்குளி, பொரள்ளை, வனாத்தமுல்ல மற்றும் கிராண்ட்பாஸ் ஆகிய பகுதிகள் அதிக அவதானம் மிக்க இடங்களாக காணப்படுகின்றன”- என்றார்.

(எ)

# பூந்தோட்டம் வீதியில் இடம்பெற்ற ஓட்டோ விபத்தில் ஒருவர் காயம்



வவுனியா, மார்ச். 20

வவுனியா- பூந்தோட்டம் பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் பகுதி நோக்கி சென்றுகொண்டிருந்த ஓட்டோ, அதே திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்தில் ஓட்டோ சாரதி காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓட்டோவுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரென திரும்ப முற்பட்ட போது இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(எ-10)

# சிறீலங்கன் ஏர்லைன்ஸ் விமான சேவைகள் திடீரென இரத்து!

கொழும்பு, மார்ச். 20

மத்திய கிழக்கு நாடுகளின் சில பகுதிகளுக்கான விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று சிறிலங்கன் ஏர்லைன்ஸ் அறிவித்துள்ளது.

இதற்கமைய, டுபாய்க்கான விமான சேவைகள் நேற்றும், இன்றும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், தமாம், டோஹா, குவைத் ஆகிய நாடுகளுக்கான விமான சேவைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று சிறீலங்கன் ஏர்லைன்ஸ் அறிவித்துள்ளது.

பயண முன்பதிவுகளை செய்தவர்கள் 1979 என்ற துரித தொலைபேசி இலக்கத்தினூடாக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

அல்லது அருகிலுள்ள சிறீலங்கன் ஏர்லைன்ஸ் அலுவலகங்களுக்கு சென்று, விமான சேவைகள் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து மழை பெய்யக்கூடும்

கொழும்பு, மார்ச். 20

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் அம்பாறை மாவட்டத்தின் சில இடங்களிலும் 50 மில்லி மீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காலை வேளையிலும் மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ, மேல், வடமேல், வடமத்திய மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அதிகரித்த வெப்பநிலை காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சிலாபம் தொடக்கம் மன்னார், காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை ஊடாக மாத்தறை வரையான கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் தென் கிழக்கு திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் இடைக்கிடையே ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# எரிபொருள் விநியோகத்தில் எந்தவித பாதிப்பும் இல்லை

## ஜனாதிபதியிடம் கட்டார் அமீர் உறுதி

கொழும்பு, மார்ச். 20

இலங்கைக்கான எரிபொருள் விநியோகத்தில் எந்தவித பாதிப்பும் இல்லை என்று கட்டார் அமீர் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, கட்டார் அமீர் ஷேக் தமீம் பின் ஹமாத் அல்-தானியுடன் தொலைபேசி ஊடாக கலந்துரையாடியதுடன், தற்போதைய பிரச்னைகள் குறித்து ஆலோசித்து கட்டாருடனான தனது ஒற்றுமையை வெளிப்படுத்தினார்.

இதன்போது, கட்டாரில் உள்ள இலங்கையர்களின் நலன் குறித்து அமீர் உறுதியளித்ததுடன், தற்போதைய சவால்களுக்கு மத்தியிலும் நிலையான எரிபொருள் விநியோகத்தை பேணுவதில் கட்டார் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார். (எ)

# முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு சத்திரசிகிச்சை

கொழும்பு, மார்ச். 20

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சத்திரசிகிச்சை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த சத்திரசிகிச்சை மிகவும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விரைவில் குணமடையப் பிரார்த்திப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# 57 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட்களுடன் 2 பெண்கள் கைது

கொழும்பு, மார்ச். 20

சுமார் 57 இலட்சம் ரூபாய் பெறுமதியான சீன நாட்டு சிகரெட்களை சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவர முயன்ற இரண்டு வெளிநாட்டுப் பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று வியாழக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 12. 30 மணியளவில் சீனாவின் செங்டு நகரிலிருந்து ஏயார் சீனா நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் மூலம் நாட்டை வந்தடைந்தனர்.

இதன்போது, அவர்களது பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 190 சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டன. அவற்றில் 38, 000 சிகரெட்கள் இருந்ததாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# நீர்ச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்ட மாணவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு!

காலி, மார்ச். 20

காலி, ஹபராதுவ - ஹெண்டிவத்த பகுதியில் கடலில் நீர்ச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்ட 16 வயது பாடசாலை மாணவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

குறித்த மாணவன் தனது நண்பர்கள் சிலருடன் இணைந்து கடலில் நீர்ச் சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்த போதே இந்த விபத்து நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன் நீரில் மூழ்கியதைக் கண்ட பிரதேசவாசிகளும், கடற்கரை பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் உடனடியாக செயல்பட்டு அவரை மீட்டனர்.

அதனைத் தொடர்ந்து அவர் கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (எ)

# 604 லீற்றர் பெற்றோலுடன் வர்த்தகர் ஒருவர் கைது!

பொலநறுவை, மார்ச். 20

அனுமதியின்றி சட்டவிரோதமான முறையில் 604 லீற்றர் பெற்றோலை சேகரித்து வைத்திருந்த வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் பொலநறுவை, மீகஸ்வெவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சில்லறை விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வந்த 70 வயது வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மெதிரிகிரிய, மீகஸ்வெவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலின் பேரில் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் இப்பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலிருந்து இந்த பெற்றோல் கையிருப்புகளை சேகரித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் காலங்களில் அதிக விலைக்கு விற்பனை செய்யும் நோக்கில் இவை சேகரிக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் கூறினர். (எ)

# கச்சா எண்ணெய் விலை மேலும் உயர்வு: பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச். 20

மத்திய கிழக்கில் இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடையே தீவிரமடைந்துள்ள நேரடி மோதல்கள் காரணமாக, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை நேற்று வியாழக்கிழமை வரலாறு காணாத வகையில் உயர்வடைந்துள்ளது.

உலகளாவிய எரிசக்தி விநியோகத்தின் இதயமாகக் கருதப்படும் முக்கிய எண்ணெய் மற்றும் எரிவாயு மையங்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளதே இந்த திடீர் விலை உயர்வுக்கு முக்கிய காரணமாகும்.

இந்தப் போர்ச் சூழல் நீடித்தால், வரும் வாரங்களில் கச்சா எண்ணெய் விலை ஒரு பரல் 150 டொலர் வரை உயரக்கூடும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது இறக்குமதி நாடுகளின் பணவீக்கத்தை அதிகரிக்கும் என்பதோடு, பெற்றோல், டீசல் விலையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் கூறினர்.

# கேரள கஞ்சாவுடன் இருவர் கைதாகினர்

கொழும்பு, மார்ச். 20

லுணுகம்வெஹெர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெவ்ரம்வெஹெர பகுதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது, 378 கிலோ கிராம் கேரள கஞ்சாவுடன் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

தங்கல்ல குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, இந்த முற்றுகை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, லொறி ஒன்றில் கடத்தப்பட்ட 27 கிலோ 161 கிராம் உலர்ந்த கஞ்சா மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட லொறியுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். (எ)

# இரண்டு துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களுடன் இளைஞன் கைது

கொழும்பு, மார்ச். 20

கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பி. குணவர்தன மாவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது, இரண்டு துப்பாக்கிகள் மற்றும் பெருமளவிலான தோட்டாக்களுடன் 18 வயது இளைஞன் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொறட்டுவை விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கல்கிஸ்ஸை பகுதியில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பிஸ்டல் ரக துப்பாக்கி, 9 மில்லி மீற்றர் ரக தோட்டாவை பயன்படுத்தக்கூடிய உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, ரி-56 ரக தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கல்கிஸ்ஸை பகுதியைச் சேர்ந்த 18 வயது இளைஞன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் மாதத்துக்கு தேவையான எரிபொருள் இறக்குமதி உறுதி

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

கொழும்பு, மார்ச். 20

ஏப்ரல் மாதத்துக்குத் தேவையான அனைத்து எரிபொருள் கொள்வனவு கட்டளைகளும் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 5 எரிபொருள் கப்பல்களுக்கான கட்டளைகள் உறுதி செய்யப்பட்டன என்று பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் மயூர நெத்தி குமாரகே கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:

"இதற்கு முன்னர் ஏப்ரல் மாத இறுதி வரை எரிபொருள் கையிருப்பு உள்ளதாக குறிப்பிட்டிருந்தோம். அது மார்ச் மாத இறுதிவரை நாம் உறுதிப்படுத்திய கப்பல்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டே கூறப்பட்டது. தற்போது ஏப்ரல் மாதம் முழுவதற் குமான கப்பல்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இதன்படி, அடுத்த மாத இறுதி வரை எமக்குத் தேவையான எரிபொருள் கையிருப்புகள் கிடைத்துக்கொண்டிருக்கும்.

எரிபொருள் விநியோகத்தில் எந்தப் பிரச்னையும் இல்லை. அத்துடன் கியூ. ஆர். குறியீட்டைப் பெற்றுக்கொள்வதில் தற்போது எந்தவித தொழில்நுட்பக் கோளாறுகளும் இல்லை. ஒரு தொலைபேசி இலக்கம் மற்றும் ஒரு அடையாள அட்டை இலக்கத்தின் கீழ் ஒரு வாகனத்தை மாத்திரமே பதிவு செய்ய முடியும் என்பதை நினைவில் கொள்ளவும்"- என்றார். (எ)

# "விவசாயிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும்"

கல்முனை, மார்ச். 20

அம்பாறை மாவட்டம் விவசாய நிலங்கள் அதிகமாக உள்ள மாவட்டமாக காணப்படுவதால், தற்போதைய எரிபொருள் ஒதுக்கீடு விவசாய தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை என்று ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதித்தலைவரும், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினருமான எம். ஏ. நளீர் தெரிவித்தார்.

தற்போது வாரத்துக்கு 75 லீற்றர் என்ற அளவில் வழங்கப்படும் எரிபொருள் ஒதுக்கீடு, விவசாய நடவடிக்கைகளுக்கு போதாது. ஒரு ஏக்கர் நிலத்தில் விவசாய பணிகளை மேற்கொள்ள குறைந்தது 20 லீற்றர் எரிபொருள் தேவையாகும் நிலையில், இந்த ஒதுக்கீடு நடைமுறையில் சிரமங்களை ஏற்படுத்தி வருகிறது.

குறிப்பாக உழவியந்திரங்களுக்கு விவசாய நடவடிக்கைகளை சீராக செய்ய வாரத்துக்கு குறைந்தபட்சம் 300 லீற்றர் எரிபொருளாவது ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-06)

# மாணிக்கக்கல் அகழ்வு: இருவர் கைது

நுவரெலியா, மார்ச். 20

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மோராவத்த பகுதியில், அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை குறித்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபர்களிடமிருந்து அகழ்வாராய்ச்சிக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

# 38 ஆவது நினைவேந்தல்



மட்டக்களப்பு, மார்ச். 20

அன்னை பூபதியின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த. சுரேஷ் தலைமையில் மட்டக்களப்பு- செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் அ. தேவகுமார், வவுணதீவு பிரதேச சபை உறுப்பினர் எஸ். செல்வகுமார் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டு அன்னை பூபதியின் சமாதியில் நிழல் படத்துக்கு மாலை அணிவித்து, சுடர் ஏற்றி, மலர்தூவி 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். (எ)

# குளவி கொட்டுக்கு இலக்கான இருவர் மருத்துவமனையில்

நுவரெலியா, மார்ச். 20

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள காட்டு மஸ்கெலியா தோட்ட லெங்கா பிரிவில் நேற்று முன்தினம் காலை குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில் இருவர் தோட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில் ஆண் தொழிலாளர்கள் இருவர் தோட்ட மருத்துவமனைக்கு ஓட்டோவில் வந்த போது அவர்கள் இருவரையும் மஸ்கெலியா மாவட்ட மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டதாக தோட்ட மருத்துவமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# "தமிழ் இளைஞர்களுக்கு எதிரானவர் சாணக்கியன்"

மட்டக்களப்பு, மார்ச். 20

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் உண்மைகளை வெளிப்படுத்திய ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டும், கடத்தப்பட்டும் அச்சுறுத்தப்பட்டனர். அதேபோன்றதொரு அடக்குமுறைச் சட்டத்தையே, அந்த அரசியல் பின்னணியில் இருந்து வந்த பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இன்று தமிழ் இளைஞர்களுக்கு எதிராகப் பயன்படுத்தி வருகின்றார் என்று ஈ.பி.டி.பியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அந்தனிசில் ராஜ்குமார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மட்டக்களப்பு பாலமீன்மடு பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஊடக சுதந்திரத்துக்காகவும் தமிழ்த் தேசியத்துக்காகவும் குரல் கொடுப்பது போலத் தோற்றமளிக்கும் சாணக்கியன், தனக்கு எதிரான உண்மைகளை ஊடகங்கள் வெளிப்படுத்தினால் அதே ஊடகங்களை நசுக்க முயற்சிப்பதாக ராஜ்குமார் கூறினார். (எ)

### ஆசிய சந்தையில் நேற்று

# கச்சா எண்ணெய் விலை 4 சதவீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச். 20

உலகின் மிகப்பெரிய இயற்கை எரிவாயு வயல்களில் ஒன்றான ஈரானின் "தெற்கு பார்ஸ்" எரிசக்தி நிலையங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து, ஆசிய சந்தையில் கச்சா எண்ணெய் விலை 4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இதன்படி, பிரெண்ட் வகை கச்சா எண்ணெய் ஒரு பரலின் விலை 112 அமெரிக்க டொலர்கள் வரை உயர்ந்துள்ளது. இதே வேளை, அமெரிக்க சந்தையிலும் கச்சா எண்ணெய் விலை 3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. ஒரு பரல் 99. 27 டொலர்களாக பதிவாகியுள்ளது.

இதேவேளை, ஏற்பட்டுள்ள எரிசக்தி நெருக்கடி காரணமாக நேற்றுக் காலை ஆசியாவின் முக்கிய பங்குச் சந்தைகள் பின்வருமாறு வீழ்ச்சியடைந்தன:

தென் கொரியா: 3 சதவீதம் வீழ்ச்சி.

ஜப்பான்: 2.8 சதவீதம் வீழ்ச்சி.

அவுஸ்திரேலியா: 1.6 சதவீதம் வீழ்ச்சி.(எ)

# மதுபானசாலைக்கு எதிராக நுவரெலியாவில் போராட்டம்

நுவரெலியா, மார்ச். 20

நுவரெலியா- ஹாவாஎலிய பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்த மூன்று பிள்ளைகளின் தந்தை, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் உணவக முகாமையாளர் கைது செய்யப்பட்ட நிலையில், அப்பகுதியில் உள்ள மதுபானசாலையை அகற்றக் கோரி பொதுமக்கள் கண்டனப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த 14ஆம் திகதி, ஹாவாஎலிய பகுதியைச் சேர்ந்த 39 வயது எஸ். அன்பழகன் என்பவர், அப்பகுதியில் உள்ள தனியார் உணவகம் ஒன்றுக்கு உணவு வாங்கச் சென்றார். அப்போது, அவருக்கும் உணவக முகாமையாளருக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது. முகாமையாளர் தாக்கியதில் படுகாயமடைந்த அன்பழகன், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உணவகத்தின் முகாமையாளரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்த நிலையில், உயிரிழந்தவரின் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இதன்போது, திரண்டிருந்த மக்கள் பதாகைகளை ஏந்தியவாறு, குறித்த பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலை உடனடியாக அகற்றப்பட வேண்டும் என கோஷங்களை எழுப்பினர். மதுபானசாலையால் இவ்வாறான வன்முறைகள் தொடர்வதாக கண்டனம் வெளியிட்டவாறே இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். (எ)

# புதன் பாடசாலை விடுமுறை நாளில் ஒன்லைன் வகுப்புகள் நடத்தப்படாது

கொழும்பு, மார்ச் 20

எரிபொருள் நெருக்கடி காரணமாக பாடசாலைகளுக்கு புதன்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், அன்றைய தினம் ஒன்லைன் மூலம் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவேவ தெரிவித்துள்ளார்.

புதன்கிழமைகளில் மாணவர்கள் வீட்டில் இருந்தபடியே கற்பதற்காக செவ்வாய்க்கிழமைகளில் வீட்டுப்பாடங்கள் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய சுற்றறிக்கையின்படி, மறு அறிவித்தல் வரை வாரத்திற்கு நான்கு நாட்கள் மட்டுமே பாடசாலைகள் இயங்கும். புதன்கிழமை விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று மாணவர்கள் வீட்டிலிருந்து சுயமாகக் கற்பதற்கு ஆதரவாக, அவர்களுக்குப் பொருத்தமான பாடங்கள், பயிற்சிகள் மற்றும் பணிகள் வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறு பாடசாலை அதிபர்களுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண...

தொடர்பு கொண்ட போது, விரிவுரையாளரைக் காண வில்லை என்று அவரது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் உறுதிப்படுத்தினர்.

குறித்த விரிவுரையாளருக்கும், நெருங்கிய உறவினர்களுக்கு மிடையிலான குடும்பப்பகை காரணமாக ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் குடும்பத்தகறாறு காரணமாக அவர் கடத்தப்பட்டிருக்கலாம் என்ற கோணத்திலும் விசாரணைகள் நடைபெறுகின்றன.

இதேவேளை, தமது உறுப்பினர் ஒருவர் தனது இருப்பிடத்தில் காணப்படாமை குறித்துத் தாம் கவலையடைந்துள்ளதாகவும், அவர் எங்கிருக்கிறார் என்பதை அறிய முடியாமல் இருப்பதும், அவரது வீட்டைச் சுற்றிப் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமெராக்கள் அடித்து நொருக்கப்பட்டிருக்கின்றமையும் நிலைமையின் பாரதூரத்தைக் காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அவரைத் தாமதமின்றிப் பாதுகாப்பாகக் கண்டுபிடிக்கப்படுவதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரியிருக்கிறது.

மேலும், இந்த விரிவுரையாளர் காணாமல் போன சம்பவம் உடனடியாகப் பொலீஸ்மா அதிபர் உட்பட உயர் பொலீஸ் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டு விசாரணைகளை விரைவாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆசிரியர் சங்கம் நேற்றிரவு வெளியிட்டுள்ள கோரிக்கை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)

## போரை நிறுத்துங்கள்...

நிறுத்துமாறு அவர் இரு நாடுகளையும் வலியுறுத்தியுள்ளார்.

இந்தப் போர் பிராந்தியத்தின் பாதுகாப்பைச் சீர்குலைப்பதுடன், சர்வதேச அமைதிக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்டை நாடுகள் மீதான தனது பதிலடித் தாக்குதல்களை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். குறிப்பாக, வளைகுடா நாடுகளின் இறையாண்மையை மதிக்குமாறும் அவர் அறிவுறுத்தினார்.

உலகளாவிய எரிசக்தி பாதுகாப்பிற்கு மிக முக்கியமான ஹோர்முஸ் நீரிணையை (மீண்டும் கப்பல் போக்குவரத்திற்காகத் திறக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நீரிணை முடக்கப்பட்டதால் உலகளவில் எரிபொருள் விலைகள் உயர்ந்துள்ளதாகவும், இது ஏழை நாடுகளைப் பெரிதும் பாதிப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

சர்வதேச கடல்வழிப் பாதைகளில் சுதந்திரமான போக்குவரத்தை உறுதி செய்வது அனைத்து நாடுகளின் கடமை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதாக அல் ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

## கறுப்புக்கொடி...

இறக்கி - அதற்குப் பதிலாகக் கறுப்புக் கொடி ஏற்றப்பட்ட சம்பவம் தொடர்பில், 03 மாணவர்களை யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவில் கடந்த 16 ஆம் திகதி முற்படுத்துமாறு பலகலைக்கழகப் பதிவாளரை மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி கடந்த 13 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

அதன்படி, தர்மலிங்கம் ஜதுர்சன், தயாபரன் லஜிதரன், ஏ. அபிசேக் ஆகியோரை யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுக்குச் செல்லுமாறு பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரியினால் மாணவர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

அந்த அறிவுறுத்தலுக்கமைய நேற்றுக் காலை மாணவர்கள் மூவரும் யாழ்ப்பாணம் பொலீஸ் தலைமைக் காரியாலயத்தில் அமைந்துள்ள மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுக்குச் சென்ற போது, அவர்களின் வாக்குமூலங்களைப் பொலீசார் பதிவு செய்யதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாணவர்கள் சுமார் 5 மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வாங்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

மாணவர்களுக்குத் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் மாணவர்களுடன் பொலீஸ் நிலையத்துக்குச் சென்றிருந்தார்.

கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர், பதிவாளர் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள், நேற்று மாணவர்களிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் என்பன சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், சட்டம் அதிபரின் அறிவுறுத்தல்களுக்கமைய அடுத்தகட்ட சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

## விசாரணைக்கு...

மூவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டமையைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்து கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களை அச்சுறுத்தும் விதமாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கலைப்பீட மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் தலைவர்கள் உட்பட மூன்று மாணவர்களை குற்றத்தடுப்பு பொலீஸார் விசாரணைக்கு வருமாறு அழைத்துள்ளதாகவும், நேற்று அந்த விசாரணைக்குச் செல்லுமாறு பல்கலைக்கழக அதிகாரிகளால் தாம் பணிக்கப்பட்டதைக் கண்டித்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை முதல் அனைத்துப் பீடங்களிலும் தமது விரிவுரைகளைப் புறக்கணித்த மாணவர்கள் முற்பகல் 10:30 மணியளவில் பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில் முன்பாகக் கூடி கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாக மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவாயிலை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தின் போது, "நிறுத்து - நிறுத்து: விசாரணைகளை நிறுத்து", "வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்", "எமது நிலம் எமக்கு வேண்டும்" போன்ற கோசங்களை எழுப்பியவாறு பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

மாணவர்களின் கவன ஈர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். (ஓ)

## வடக்கில் வாழும்...

"சிங்ஹிந்தியா சமாதான நடைபயணம் மற்றும் வாகன ஊர்வலம் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது.

இந்த நடைபயணம் யாழ்ப்பாணத்தில் இருந்து தொடங்கி கொழும்பு வரை தொடரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிகழ்வு மூலம் வடக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள சமூகத்தின் பிரச்னைகள், பாதுகாப்பு, நில உரிமைகள் மற்றும் வாழ்வாதார சிக்கல்கள் குறித்து தேசிய மட்டத்தில் கவனம் செலுத்தச் செய்வதே முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டது. (அ)

## சிறீலங்கன் எயார்லைன்ஸ்...

ரூபா பணம் மூன்று தவணைகளாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், முன்னாள் சிவில் வானூர்தி போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவிடம் மேலதிகமாக 20 மில்லியன் ரூபா வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தில் கபில சந்திரசேனவின் மனைவியின் பெயரில் போலி நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சிங்கப்பூரில் வங்கிச் கணக்கொன்றும் திறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் ஊடாக ஐரோப்பிய வானூர்தி பாதுகாப்பு மற்றும் விண்வெளி நிறுவனத்திடம் இருந்து சுமார் 1,454,645.54 யூரோக்கள் கையூட்டாக பெறப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த நிதி பின்னர் அவுஸ்திரேலியாவிலுள்ள கொமன் வெல்த் வங்கியின் சந்தேகநபரின் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்தப் பணத்தின் ஒரு பகுதி சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவருக்கும், ஏனைய உயர்மட்ட அரச அதிகாரிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு தலைமை நீதவான் அஸங்க எஸ். போதரகம முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, சந்தேகநபரான கபில சந்திரசேனவை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

## சிங்கப்பூரில்...

பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தின்போது பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்ததாகவும், முன்னாள் ஜனாதிபதி விரைவில் குணமடைய வாழ்த்துவதாகவும் அவர் மேலும் இதன்போது கூறினார். (அ)

## அமெரிக்க...

சேர்ஜியோ கோர் மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், மத்திய கிழக்கின் போர்ச் சூழல் குறித்த இலங்கையின் நிலைப்பாடு மற்றும் போர்ச் சூழல் காரணமாக இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் ஜனாதிபதி இதன்போது தூதுக்குழுவினருக்கு விளக்கமளித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

## மத்திய கிழக்கு...

வருகின்றோம் என வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற மத்திய கிழக்கின் போரினால் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை தொடர்பிலான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்-

நாட்டை பாரிய பொருளாதார குழிக்குள் கடந்த அரசாங்கம் தள்ளியிருந்தது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் அதில் இருந்து நாட்டை மீட்டு வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தோம். இதன்போது கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட விடயங்களை மேற்கொண்டு நாட்டை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுத்தோம்.

பொருளாதார வளர்ச்சி வேகமும் அதிகரித்து சென்றது. ஊழல் மோசடி இன்றி வெளிப்படைத் தன்மையுடன் நாங்கள் அரசாங்கத்தை முன்னெடுத்த போது புதிய முதலீடுகள் மூலம் நாடு மேலேழுந்து வந்த போது டித்வா புயல் ஏற்பட்டது. இதன்போது எமக்கு சர்வதேச நாடுகள் உதவிகளை வழங்கின. சர்வதேச ஒத்துழைப்புகளுடன் அந்த சவால்களையும் வெற்றிபெற்று நாட்டை மீள் கட்டியெழுப்பும் நேரத்திலேயே உலகில் எதிர்பாராத யுத்தம் ஏற்பட்டது.

இந்த யுத்தத்தின் பாதிப்பு முழு உலகத்திற்கும் ஏற்பட்டுள்ளது. முழு உலகத்தின் எரிபொருள் விநியோகம் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இது எமது அரசாங்கம் ஏற்படுத்தியது அல்ல. எமது முடியாமையினால் ஏற்பட்டது அல்ல. கடந்த காலங்களில் ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களில் முகம்கொடுக்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்தியிருந்தால் இன்று இந்த பிரச்சினை எமக்கு ஏற்பட்டிருக்காது. இங்கு போதுமான எரிபொருள் சேமிப்பு வசதி கிடையாது.

திருகோணமாலை எரிபொருள் குதங்களை மறுசீரமைத்து அதன்மூலம் எரிபொருள் சேமிப்புக்கான வசதிகளை ஏற்படுத்தவில்லை. ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்த உடனேயே இந்தியாவுடன் இந்த விடயம் தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டோம். எமக்கு இதுபோன்ற நிலைமைகளில் நிரந்தரமான தீர்வு அவசியமாகும். இதற்காக நாங்கள் திறைசேரி நிதி மூலம் எரிபொருள் தாங்கிகளை மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இப்போது உலக நாடுகளுக்கு எரிபொருள் விநியோக கப்பல்களுக்கு ஹோர்முஸ் சந்தி கடல் ஊடாக வருவதில் பிரச்னை உள்ளது. ஆனால் எமக்கு வரும் கப்பல்கள் அங்கிருந்து வருவதில்லை. இந்தியா, சிங்கப்பூரில் இருந்தே நாங்கள் எரிபொருள் கொள்வனவை செய்கின்றோம்.

இதேவேளை ஈரான் கப்பல்கள் தொடர்பில் இந்த பாராளுமன்றத்தில் பொய்யான தகவல்கள் கூறப்பட்டன. மூன்று ஈரான் கப்பல்கள் இந்தியாவில் நடந்த நிகழ்வுக்கு சென்றிருந்தபோது, மார்ச் 9ஆம் திகதி முதல் மார்ச் 13ஆம் திகதி வரையில் இலங்கைக்கு வருவதற்காக பெப்ரவரி 26ஆம் திகதி அனுமதி கோரப்பட்டது.

இதற்கு மேல் எதுவும் நடக்கவில்லை. மார்ச் 4ஆம் திகதியே குறிப்பிட்ட தாக்குதல் சம்பவம் நடந்தது. நாங்கள் சமூத்திர சட்டங்களுக்கமைய சகல விடயங்களையும் முன்னெடுத்தோம். சகல நாடுகளுடனும் நாங்கள் நட்புறவுடன் நடந்துகொள்கின்றோம். எந்த நாட்டுடனும் எமக்கு பிரச்னை கிடையாது.

எமது வெளியுறவுக் கொள்கையை நிலையாக பேணுகின்றோம். இந்த யுத்தத்தில் எந்த தரப்பினருக்கும் ஆதரவளிக்கும் நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. உலக சமாதானத்திற்காக நாங்கள் தலைலயீடுகளை செய்வோம். ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்பு சபையில் யோசனையொன்று கொண்டுவரப்பட்டது.

அது சமநிலையான யோசனை அல்ல. அதன்போது நாங்கள் சமநிலையற்ற யோசனைக்கு ஆதரவளிக்க மாட்டோம் என்பதனை தெளிவாக கூறினோம். இந்த யுத்தத்தை மூன்று தரப்பும் நிறுத்த வேண்டும். நாங்கள் எந்த நிலையிலும் நாட்டுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்ததில்லை.

தேவையான இராஜதந்திரங்களை பயன்படுத்தி நாட்டுக்கு நன்மையளிக்கும் வகையில் நாங்கள் செயற்படுவோம். எரிபொருள் விடயத்தில் ரஷ்யாவுடன் கதைத்துள்ளோம். அத்துடன் சீனா, இந்தியாவுடனும் கலந்துரையாடியுள்ளோம். இதனால் நாங்கள் முறையான தீர்மானங்களுடன் நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்போம்-என்றார். (அ)

## எந்த நிதி...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் விநியோகத் தட்டுப்பாடானது ஒரு வெளிப்புறக் காரணியினால் ஏற்பட்டதாகும். இதனை அரசாங்கம் மிகவும் வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்து வருகின்றது.

நாட்டில் உள்நாட்டு ரீதியான நிதி நெருக்கடி ஒன்று காணப்படுமாயின், அரசாங்கத்தின் வருமானம் குறைந்திருக்க வேண்டும் அல்லது திறைசேரியில் செலவுகளுக்குப் பணம் இல்லாது போயிருக்க வேண்டும். ஆனால், தற்போது அத்தகைய நிலைமை இல்லை.

தற்போதைய அரசாங்கம் வரவுசெலவுத் திட்டப் பற்றாக் குறையைக் குறைத்துள்ளது. எனவே, நாட்டின் பொருளாதார உறுதித்தன்மை பாதுகாக்கப்பட்டுள்ளது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட நெருக்கடியானது தோல்வியடைந்த பொருளாதாரக் கொள்கைகள், மோசடி மற்றும் ஊழல்களினால் ஏற்பட்டதாகும்.

ஆனால், தற்போதைய நிலைமை ஒரு வெளிப்புற விநியோகச் சங்கிலி நெருக்கடியாகும். இவ்விரண்டையும் ஒன்றாக ஒப்பிட முடியாது-என்றார். (அ)

## ஏப்ரல் மாதம்...

முன்பதிவுகள் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் ஏப்ரல் மாத இறுதி வரை நாட்டுக்குத் தேவையான எரிபொருள் தொடர்ச்சியாகக் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் மார்ச் இறுதி வரை மட்டுமே கையிருப்பு உள்ளதாகக் கூறப்பட்டது. ஆனால் தற்போது அடுத்த மாத இறுதி வரை தேவையான எரிபொருள் கிடைப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை.

கியூ.ஆர். குறியீட்டைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட தொழில்நுட்பத் தடைகள் தற்போது முழுமையாக நீக்கப்பட்டுள்ளன.

கியூ.ஆர். முறைமையின் கீழ் பதிவு செய்யும் போது ஒரே ஒரு அடையாள அட்டை இலக்கம் மற்றும் ஒரே ஒரு தொலைபேசி இலக்கத்தின் கீழ் ஒரு வாகனத்தை மாத்திரமே பதிவு செய்ய முடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# எரிபொருள் நெருக்கடியை தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளது அரசு!

## சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க



கொழும்பு, மார்ச் 20

எரிபொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தவும், அத்தியாவசிய சேவைகளுக்காக அடுத்த சில மாதங்களுக்குத் தேவையான எரிபொருளைச் சேமிக்கவும் முன்னெடுக்கப்பட்டுள்ள புதிய நடவடிக்கைகள் குறித்து சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று பாராளுமன்றத்தில் விளக்கமளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது எரிபொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தவும், தேவையற்ற முறையில் எரிபொருள் சேகரிப்பதைத் தவிர்க்கவும், அத்தியாவசிய சேவைகளுக்காக அடுத்த சில மாதங்களுக்கு எரிபொருளைச் சேமிக்கும் நோக்கிலும் கியூ.ஆர் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது எரிபொருள் தட்டுப்பாட்டினால் மட்டும் எடுக்கப்பட்ட முடிவு அல்ல, மாறாக எதிர்கால நிலைமைகளைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும்.

எரிபொருளைத் தேவையற்ற முறையில் சேமிப்பதைத் தடுக்கவும், விநியோகத்தைச் சீராக்கவும் கியூ. ஆர். குறியீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இலங்கையில் சுமார் 88 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், அவற்றில் பல பழைய வாகனங்கள் இன்னும் பதிவேடுகளில் இருந்து நீக்கப்படாமல் உள்ளன.

2023ஆம் ஆண்டில் சுமார் 70 முதல் 72 இலட்சம் வாகனங்கள் கியூ.ஆர் முறைக்காகப் பதிவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இதுவரை 55 இலட்சத்திற்கும் அதிகமானோர் வெற்றிகரமாகப் பதிவு செய்துள்ளனர். மார்ச் 15 முதல் மார்ச் 18 வரையிலான காலப்பகுதியில் மட்டும் தலா 3 இலட்சத்திற்கும் அதிகமான புதிய பதிவுகள் தினசரி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பழைய வாகனம் வைத்திருப்பவர்கள் அல்லது தொலைபேசி இலக்கங்களை மாற்றியவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இருப்பினும், தவறான அல்லது வஞ்சகமான முறையில் தரவுகளை மாற்ற முயல்பவர்கள் கணினி குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாவார்கள். வாகன இலக்கத் தகடுகள் கிடைக்காத வாகன உரிமையாளர்களுக்கு எரிபொருள் வழங்குவதில் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இலக்கத் தகடுகள் இல்லாதவர்கள், வாகன வருமான வரி அனுமதிப் பத்திரம், காப்புறுதி ஆவணங்கள் அல்லது புகைச் சான்றிதழ் ஆகியவற்றைப் பயன்படுத்தி எரிபொருளைப் பெற்றுக்கொள்ளலாம். எரிபொருள் நிலையங்களில் நிலவும் நெரிசலைக் குறைக்க ஒற்றை - இரட்டை இலக்க முறை தொடர்ந்து அமுல்ப்படுத்தப்படும். குறிப்பிட்ட சில பகுதிகளில் எரிபொருள் பயன்பாடு வழக்கத்தை விட இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் தேவையற்ற முறையில் எரிபொருளைச் சேமித்து தங்களுக்குத் தாங்களே நெருக்கடியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் - என்றார். (அ)

# சட்டத்தை மதிப்பதே நெருக்கடிக்கு தீர்வு!

## பொலிஸார் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 20

சட்டத்தை மதிப்பதே தற்போதைய நெருக்கடிக்கு ஒரே தீர்வு என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வுட்லர் தெரிவித்தார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள அசாதாரண சூழல் மற்றும் எரிபொருள் நெருக்கடியைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் சட்டவிரோதச் செயல்கள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது நிலவும் யுத்தம் போன்ற இக்கட்டான சூழ்நிலையில், நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த 10 இற்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கைப் பொலிஸாருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

உள்ளூர் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் அரசுடன் இணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படும் வேளையில், பொலிஸாரின் வகிபாகத்தை எவரும் குறைத்து மதிப்பிட வேண்டாம்.

எரிபொருளைச் சட்டவிரோதமாகச் சேமித்து வைத்திருந்த நபர்கள் மற்றும் அதற்குத் துணை நின்றவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெறியற்ற முறையில் மற்றும் சமூக விரோதப் போக்குடன் செயற்படும் நபர்களுக்கு எதிராகப் பொலிஸார் கடும் சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

குற்றச் செயல்கள் அல்லது வன்முறைகள் தொடர்பான தகவல்கள் இருப்பின் உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்க வேண்டும். சட்டத்தை நிலைநாட்டப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் - என்றார். (அ)

# முன்னர் அரசியல் நெருக்கடி ஏற்பட கொரோனா தடுப்பூசிகளே காரணம்

## கூறுகிறார் சரத் வீரசேகர



கொழும்பு, மார்ச் 20

கொரோனா தடுப்பூசிகளைப் பெறுவதற்காக நாட்டின் கையிருப்பிலிருந்த நிதி முழுவதும் செலவிடப்பட்டதே அந்நேரத்தில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடிக்கான காரணம் என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பு பத்தரமுல்லையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், மக்களின் உயிரைக் காக்க அவசரமாக தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டதால் எரிபொருள் இறக்குமதிக்கான நிதி பற்றாக்குறை ஏற்பட்டதாக கூறினார்.

மேலும், அந்நேர டொலர் நெருக்கடியை மேலும் மோசமாக்குவதற்காக வெளிநாட்டு தொழிலாளர்களை பணம் அனுப்ப வேண்டாம் என சிலர் தூண்டியதாகவும் குற்றம் சாட்டினார்.

எரிபொருள் நெருக்கடிக்கு உலகப் போரை காரணமாகக் காட்டுவது தவறு என்றும், சரியான வெளிநாட்டு கொள்கை இருந்திருந்தால் நட்பு நாடுகளின் உதவியுடன் அதை சமாளிக்க முடிந்திருக்குமே என்றும் அவர் குறிப்பிட்டார்.

தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் மின்சார உற்பத்தியில் டீசல் வீணாகின்றது என்றும், இது நிர்வாகத் தோல்வி எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், முன்னாள் புலனாய்வுப் பிரிவு பிரதானி சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டமை அரசியல் பழிவாங்கல் எனக் கூறிய அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எந்த ஆதாரமும் முன்வைக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

உண்மையான குற்றவாளிகளை கைது செய்யாமல், முன்னாள் அமைச்சர்களை குறிவைத்து அரசியல் நாடகம் நடத்தப்படுகின்றது எனவும் சரத் வீரசேகர குற்றம் சாட்டினார். (அ)

# அன்னை பூபதி நினைவு தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு




கிளிநொச்சி, மார்ச் 20

ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் அகிம்சை வழியில் போராடித் தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகத் தாய் அன்னை பூபதியின் 38 ஆம் ஆண்டு நினைவு நாள், நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் காரியாலயமான "அறிவகத்தில்" மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நினைவேந்தல் நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கிய செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (அ)

# போலிப் பிரசாரங்களை முறியடிப்பதற்கு மெட்டாவுடன் கைகோர்க்கும் இலங்கை!

கொழும்பு, மார்ச் 20

இலங்கையில் சமூக ஊடகத் தளங்கள் ஊடாகத் திட்டமிட்டுப் பரப்பப்படும் தவறான தகவல்கள் மற்றும் போலிப் பிரசாரங்களை முறியடிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று வெகுஜன ஊடக அமைச்சில் இடம்பெற்றது.

இதில் மெட்டா நிறுவனத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தமது ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளனர்.

[illegible] யான மற்றும் நம்பகமான தகவல்களைப் பெறுவதை உறுதிப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதற்கமைய, போலித் தகவல்கள் பரவுவதைத் தடுப்பதற்கான தொழில்நுட்ப மற்றும் நடைமுறைச் சாத்தியமான உதவிகளை வழங்க மெட்டா நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் தேசிய வேலைத்திட்டமான "ரட்டம எகட்ட" திட்டத்தின் கீழ் இந்த ஒத்துழைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தச் சந்திப்பில் சட்டவிரோத போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஒருங்கமைக்கப்பட்ட முறையில் முன்னெடுப்பதற்குத் தனது சமூக ஊடகத் தளங்களை பயன்படுத்த மெட்டா நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.